# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :- | O.S.No.340/2017 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர் | :- | வா.சா– 01 ( PW– 01 ) |
| பெயர் | :- | சாவித்திரி |
| தேதி | :- | 17–03–2026 |

**சான்றாளருக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

வழக்குச் சொத்தை 01-ஆம் பிரதிவாதி, 02-ஆம் பிரதிவாதி, எனது தாயார் காமாட்சி அம்மாள் ஆகியோர் 20.04.1988-ஆம் தேதியன்று பாகப் பிரிவினை செய்துகொண்டார்கள் என்றால் சரியல்ல. அதுச் சம்மந்தமாக பாக கூர்சீட்டு எழுதி சான்றாளர்கள் முன்னிலையில் கையொப்பம் இட்டார்கள் என்றால் அது எனக்குத் தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் குறித்து எனக்குத் தெரியாது. 03-ஆம் பிரதிவாதி எதிர்வழக்குரை யில் என்ன சொல்லியுள்ளார் என்று எனக்குத் தெரியாது. நான் படிக்கவில்லை. வழக்கு சொத்து A, B அட்டவணை சொத்தாக பிரிக்கப் -பட்டது என்றால் சரியல்ல. A அட்டவணை சொத்து 01-ஆம் பிரதிவாதிக்கும் B அட்டவணை சொத்து 02- ஆம் பிரதிவாதிக்கும் காமாட்சி அம்மாளுக்கும் ஒதுக்கப்பட்டது என்றால் எனக்குத் தெரியாது. A பாகத்திற்கு புல எண் 14/4-ல் 20978 சதுரடி இடமும், 14/3-ல் 6970 சதுரடி இடமும் ஒதுக்கப்பட்டது என்றால் அதுப் பற்றி எனக்குத் தெரியாது. புல எண் 16/3-ல் அடங்கிய இடம் B பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால் அது எனக்குத்

தெரியாது. B அட்டவணை சொத்தை 02-ஆம் பிரதிவாதி குமாரும் காமாட்சி அம்மாளும் 14.02.1994-ஆம் தேதியன்று 04-ஆம் வாதி ஜெயந்திக்கு விற்றுவிட்டார்கள் என்றால் அது எனக்குத் தெரியாது.

A அட்டவணை சொத்தை 01-ஆம் பிரதிவாதி ராஜமாணிக்கம் அவருடைய மனைவியான 04-ஆம் பிரதிவாதி காயத்திரிக்கு 08.01.2003-ஆம் தேதியன்று அறுதியாவண கொடையாக கொடுத்துவிட்டார் என்றால் அது எனக்குத் தெரியாது. 04-ஆம் பிரதிவாதி காயத்திரி அந்த சொத்தை 05-ஆம் பிரதிவாதிக்கும் 06-ஆம் பிரதிவாதிக்கும் விற்றுவிட்டார் என்றால் அது எனக்குத் தெரியாது. அந்த சொத்தை 05, 06-ஆம் பிரதிவாதிகள் 03-ஆம் பிரதிவாதி குணசேகரனுக்கு விற்றுவிட்டனர் என்றால் அது எனக்குத் தெரியாது.

A அட்டவணை சொத்தின் ஒருபகுதியை 01-ஆம் பிரதிவாதி ராஜமாணிக்கம் UCO வங்கியில் அடைமானம் வைத்து கடனை செலுத்தாததால் அச்சொத்து ஏலத்தில் விடப்பட்டு 07-ஆம் பிரதிவாதி நாகராஜன் அதை ஏலம் எடுத்திருக்கிறார் என்றால் எனக்கு தெரியாது.

03-ஆம் பிரதிவாதி 02.07.2010-ஆம் தேதியன்று 05-ஆம், 06-ஆம் பிரதிவாதிகளிடமிருந்து வாங்கிய சொத்தை சுவாதீனம் கொண்டு அனுபோகம் செய்கிறார் என்றால் சரியல்ல. 03-ஆம் பிரதிவாதி 13625 சதுரடி இடத்தை கிரயம் வாங்கினார் என்றால் சரியல்ல. வருவாய் துறை ஆவணங்களில் தன் பெயரை பதிவுசெய்து வரி வகையறாக்களை செலுத்தி 03-ஆம் பிரதிவாதிதான் அனுபோகம் செய்கிறார் என்றால் சரியல்ல. நான் ஒருபோதும் அந்த சொத்தில் சுவாதீனத்தில் இருந்ததில்லை என்றால் சரியல்ல.

தடையுறுத்துக்கட்டளை உள்ளிட்ட நிவாரணங்களை கோர எனக்கு முகாந்திரம் இல்லை என்றால் சரியல்ல. 03-ஆம் பிரதிவாதி வாங்கிய சொத்தில் இந்த வழக்கின் மற்ற பிரதிவாதிகள் யாருக்கும் உரிமையில்லை என்றால் சரியல்ல. 02-ஆம் பிரதிவாதி குமாரின் மனைவி 04-ஆம் வாதி ஜெயந்தி ஆவார். கூட்டு சுவாதீனத்ததை காட்ட நான் எந்த ஆவணமும் காட்டவில்லை என்றால் சரியல்ல. கூட்டு சுவாதீனத்தில் இருப்பதாக நான் இந்த வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

எனது சகோதரர் வாடகை பணம் கொடுத்தது சம்மந்தமாக ஆவணம் எதையேனும் தாக்கல்செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் எதற்காக 03 முதல் 07 வரையிலான பிரதிவாதிகளை இந்த வழக்கில் சேர்த்தேன் என்றால் எங்கள் இடத்தில் 03-ஆம் பிரதிவாதி கொட்டகை அமைத்ததால் மற்ற பிரதிவாதிகளும் சம்மந்தப்பட்டு இருக்கிறார்கள் என்று தெரிந்து அவர்களை சேர்த்தேன். 04-ஆம் வாதி கிரயம் வாங்கியது குறித்து அவர் என்னிடம் சொல்லவில்லை. 04-ஆம் வாதி இந்த வழக்கில் சாட்சி சொல்லபோகிறாரா என்றால் இல்லை. என்னுடைய பாகப்பிரிவினை நிவாரணம் காலவரம்பீட்டு சட்டத்தால் தடைசெய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.